இணைப்பு II

(597 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 12—கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

அறிவிப்புகள்

(1) பயிர்க் கடன் வழங்குதல்

2009-2010 ஆம் ஆண்டில் ரூ. 2,000 கோடி அளவிற்கு பயிர்க் கடன் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. குறியீட்டினை மிஞ்சி பயிர்க் கடன் ரூ. 2,169.48 கோடி வழங்கப்பட்டது. 2010-2011 ஆம் ஆண்டில் ரூ. 2,500 கோடி அளவிற்கு பயிர்க் கடன் வழங்கப்படும்.

(2) கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் பயிர்க்கடன் வழங்குதல்

2008-2009 மற்றும் 2009-2010 ஆம் ஆண்டுகளில், ஆண்டுக்கு 10,000 குழுக்கள் வீதம் விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு ரூ. 10 கோடி வீதம் சுழல் நிதியாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. கடந்த 2 ஆண்டுகளில் 22,145 விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2010-2011 ஆம் ஆண்டில் மேலும் 10,000 குழுக்கள் உருவாக்கப்பட்டு ரூ. 10 கோடி சுழல் நிதியாக வழங்கப்படும். இக்கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு பயிர்க் கடன் வழங்கப்படுவதுடன் விவசாயம் சார்ந்த முதலீட்டுக் கடன்கள் வழங்குவதிலும் முன்னுரிமை அளிக்கப்படும்.

(3) மாற்றுத் திறனாளிகளுக்கு பொருளாதார முன்னேற்றக் கடன்

தமிழக முதல்வர் அவர்கள் மாற்றுத் திறனாளிகள் மீது மிகுந்த பரிவு கொண்டு அரசில் தனித் துறையை ஏற்படுத்தியுள்ளார்கள். மாற்றுத் திறனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள்மூலம் 2005-2006 ஆம் ஆண்டில் ரூ. 63.89 இலட்சம் கடன் மட்டுமே வழங்கப்பட்டது.

2010 ஏப்ரல் 16]

ஆனால், 2009-2010 ஆம் ஆண்டில் ரூ. 545 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில், மாற்றுத் திறனாளிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்காக ரூ. 7 கோடி கடன் வழங்கப்படும்.

(4) முதலீட்டுக் கடன்

குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புகள் மற்றும் நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் அமைப்புகள் மூலம் வேளாண் சார்ந்த பணிகளுக்காக 2010-2011 ஆம் ஆண்டில் முதலீட்டுக் கடன்கள் ரூ. 300 கோடி அளவிற்கு வழங்கப்படும்.

(5) நுண்ணீர்ப் பாசனக் கடன்

சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன வசதிகள் அமைக்க ரூ. 100 கோடி அளவுக்கு 2010-2011 ஆம் ஆண்டில் கடன் வழங்கப்படும்.

(6) சிறு வணிகக் கடன் அளவு ரூ. 5,000–த்திலிருந்து ரூ, 10,000 ஆக உயர்த்தப்படுகிறது

சிறு வணிகக் கடனாக இதுவரை ஒரு நபருக்கு ரூ. 5,000 அளவிற்குக் கடன் வழங்கப்பட்டு வந்தது. இது 2010-2011 ஆம் ஆண்டில் நபருக்கு ரூ. 10,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். ரூ. 100 கோடி அளவிற்கு இக்கடன்கள் தனி நபர்களுக்கு நேரடியாகவும் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலமாகவும் 2010-2011-இல் வழங்கப்படும்.

(7) விவசாயிகளுக்கு 2010–2011 ஆம் ஆண்டில் ரூ. 150 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படும்

அறுவடைக் காலங்களில் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுக்கு தகுந்த விலை கிடைக்கும் வரையில் சேமித்து வைக்க சேமிப்பு வசதி உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் கிடங்கு வசதி அளிக்கப்பட்டு தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படுகிறது. 2009-2010 ஆம் ஆண்டில் ரூ. 133.62 கோடி வழங்கப்பட்டது. 2010-11 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் ரூ. 100 கோடியும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ரூ. 50 கோடியும் ஆக மொத்தம் ரூ. 150 கோடி அளவிற்குத் தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படும்.

[2010 ஏப்ரல் 16

(8) 2010–2011 ஆம் ஆண்டில் மேலும் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வேளாண் சேவை மையங்கள்

பண்ணை இயந்திரங்களை விவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்துவதனை ஊக்குவிக்கும் பொருட்டு ஏற்கெனவே 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வேளாண்மை சேவை மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில் மேலும் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வேளாண்மை சேவை மையங்கள் தொடங்கப்படும்.

(9) பொது சேவை மையங்கள் மேலும் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு விரிவாக்கம்

ஊரகப் பகுதிகளில் வசிப்பவர்கள் இணையதளம்மூலம் நிலப்பட்டா போன்ற சான்றிதழ்கள் பெறவும், கணினிமூலம் செய்திகள் அனுப்பவும், ஒளிநகல் எடுத்தல் போன்ற வசதிகளைப் பெறும் பொருட்டு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ஒரு சேவை மையத்திற்கு ரூ. 1.62 இலட்சம் வீதம் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு மொத்தம் ரூ. 1.62 கோடி செலவில் பொது சேவை மையங்கள் அமைக்கப்படும் என்று கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. தற்போது 141 பொது சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2010-2011 ஆம் ஆண்டில் மேலும் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் மின்னணு பொது சேவை மையங்கள் அமைக்கப்படும்.

(10) ஐந்து மாவட்டத் தலைநகரங்களில் கூட்டுறவு அலுவலக வளாகங்கள் அமைக்கப்படும்

கடந்த ஆண்டு 10 மாவட்டத் தலைநகரங்களில் கூட்டுறவு அலுவலக வளாகங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதில் 8 மாவட்டத் தலைநகரங்களில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2 மாவட்டங்களில் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2010-11 ஆம் ஆண்டில் ஐந்து மாவட்டத் தலைநகரங்களில், அதாவது திருவள்ளூர், தருமபுரி, கடலூர், கரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் கூட்டுறவு அலுவலக வளாகங்கள் அமைக்கப்படும். இதற்கான ரூ. 5 கோடி நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து வழங்கப்படும்.

2010 ஏப்ரல் 16]

(11) பொள்ளாச்சி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 50 இலட்சம் செலவில் தேங்காயைக் கொப்பரையாக மாற்றும் அலகு அமைக்கப்படும்

வெளிச்சந்தையில் தேங்காய் மற்றும் கொப்பரை விலை குறையும்போது மத்திய அரசு ஆதார விலைத் திட்டத்தின்கீழ் கொப்பரைக்கு விலை நிர்ணயம் செய்து தேசியக் கூட்டுறவு விற்பனை இணையத்தின்மூலம் கொள்முதல் செய்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலான தென்னை விவசாயிகள் தேங்காயைக் கொப்பரையாக மாற்றாமல் அப்படியே விற்று வருகின்றனர். கொப்பரையாக மாற்றி விற்கும்போது அதிக ஆதாயம் கிடைக்கும். இதைக் கருத்திற்கொண்டு தேங்காய் அதிகம் உற்பத்தியாகும் பகுதியான பொள்ளாச்சியில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியுதவியுடன் ரூ. 50 இலட்சம் செலவில் தேங்காயைக் கொப்பரையாக மாற்றும் அலகு அமைத்துத் தரப்படும்.

(12) 2010–2011 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக ரூ. 25 கோடி அளவிற்கு தரமான விதைகள் விற்பனை செய்யப்படும்

விவசாயிகளுக்கு தரமான விதைகள் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், இவ்வரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகள் வாயிலாக 2009-2010 ஆம் ஆண்டில் ரூ. 20.67 கோடிக்கு தரமான விதைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகம் செய்யப்பட்டன.

நடப்பு ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலமாக ரூ. 25 கோடி அளவிற்கு தரமான நெல், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள் மற்றும் காய்கறி விதைகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு விற்பனை செய்வதன்மூலம் தமிழகத்தில் வேளாண்மை விளைபொருள் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2010 ஏப்ரல் 16

(13) இரண்டு கூட்டுறவு மேலாண்மை நிலையங்களுக்கு புதிய சொந்தக் கட்டடம் கட்டப்படும்

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாகச் செயல்பட்டு வரும் சிவகங்கை மற்றும் நாகர்கோவில் ஆகிய கூட்டுறவு மேலாண்மை நிலையங்களுக்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியுதவி மூலம் மொத்தம் சுமார் ரூ. 1.50 கோடி மதிப்பில் அனைத்து கட்டமைப்புகளுடன் கூடிய புதிய சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

(14) கூட்டுறவு நிறுவனங்களின் கிடங்குகளைப் புதுப்பித்தல்

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஊரகக் கிடங்குத் திட்டத்தின்கீழ் ரூ. 14.80 கோடி செலவில் 426 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் கிடங்குகளைப் புதுப்பிக்கவும், புதிய கிடங்குகளை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(15) கூட்டுறவு நிறுவனங்களில் மருந்தகங்களை துவக்குதல்

தற்போது 11 மருந்தகங்களை கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தி வருகின்றன. பொதுமக்களுக்கு நம்பகமான தரமான மருந்து வகைகள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகுக்கும் வகையில் 2010-2011 ஆம் ஆண்டில் கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் 50 மருந்தகங்கள் கூடுதலாக துவக்கப்படும்.

(16) நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் சுயசேவைப் பிரிவுகளை ரூ. 1 கோடி செலவில் நவீனமயமாக்கி வியாபார நடவடிக்கைகள் மேம்படுத்தப்படும்

கோயம்புத்தூர் மற்றும் வேலூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் தலைமையிடங்களிலும் மற்றும் சென்னையிலுள்ள திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் இராஜா அண்ணாமலைபுரம், தேனாம்பேட்டை மற்றும் இராயப்பேட்டை ஆகிய ஐந்து இடங்களில் நடப்பு நிதி ஆண்டில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 1 கோடி செலவில் சுய சேவைப் பிரிவுகளை நவீனமயமாக்கி விற்பனையை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.